வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 13.5.2025 நேரம் மாலை 6.20 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தீவிரவாத முகாம்களை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் இந்தியாவிற்கு இருப்பதை,ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்தி மோடி கூறி உள்ளார்.

ராணுவ நடவடிக்கையின் வெற்றி குறித்து மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 11 நாள் பிரச்சார யாத்திரை, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

புதுச்சேரியில் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள, புள்ளிவிவரக் கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

தென்மேற்கு பருவமழை இன்று, தெற்கு வங்க கடல், தெற்கு அந்தமான கடல், நிகோபார் தீவுகள், மற்றும், வடக்கு அந்தமான் கடலின் சில பகுதிகளுக்கு முன்னேறி உள்ளது.

மோடி-ஆதம்பூர்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமானப் படை தளத்திற்கு நேரில் சென்று, துணிச்சல் மிகுந்த விமானப் படையினர் மற்றும் போர் வீரர்களை சந்தித்துக் கலந்துரையாடினார். இந்திய படையினரின் வீரத்தை பிரதமர் பாராட்டி, இவர்களின் மன உறுதியை ஊக்கப்படுத்தினார். துணிச்சல், அச்சமின்மை மற்றும் மன உறுதியின் வடிவமாகவே திகழும் பாதுகாப்பு படையினரை நேரில் சந்தித்தது, மிகச் சிறந்த அனுபவம் என்று சமூக ஊடக பதிவில் பிரதமர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் ஆதம்பூர் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்................

(வாய்ஸ்)

தீவிரவாத முகாம்களை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் இந்தியாவிற்கு இருப்பதை, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் நாடு வெளிப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்தி மோடி. ஜவான்களிடையே பேசுகையில் கூறினார். தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதற்கு அப்பாற்பட்டு தீவிரவாதிகளின் சதி திட்டங்கள் மற்றும் முரட்டுத் துணிச்சலுக்கும் முடிவு கட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நாட்டிற்கான படைவீரர்களின் சேவைக்கு நாடு எப்போதும் நன்றிக் கடன் பட்டுள்ளதாக பிரதமர் கூறினார். ஜவான்களோடு இணைந்து, பாரத் மாதா கி ஜே என அவர் முழக்கம் எழுப்பினார். நாட்டிற்காக உயிர் தியாகம் செய்ய தயாராக உள்ள ஜவான்களின் மன உறுதியை வெளிப்படுத்துவதே, பாரத் மாதா கி ஜே என்றும், நாட்டிற்காக வாழ்ந்து நாட்டிற்காக ஏதேனும் செய்யத் துடிக்கும் குடிமக்களின் குரலாகவே இந்த முழக்கம் ஒலிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். அணு ஆயுத மிரட்டலுக்கு அஞ்சாமல் இந்தியா தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று, நாட்டு மக்களுக்கான உரையில், உறுதிபடத் தெரிவித்ததும் குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையே, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவ்கான், முப்படை தலைவர்களுடன், உயர்நிலைக் கூட்டம் நடத்தினார். மத்திய அரசு இன்று மாலை புதுடெல்லியில், பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களைச் சேர்ந்த, ராணுவ விவகாரங்கள் துறை அதிகாரிகளுக்கு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விவரங்களை எடுத்துக் கூற உள்ளது. ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பல்வேறு தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்து, நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை கொன்றுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

*கொடி- யாத்திரை*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் வெற்றி குறித்த விவரங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 11 நாள் பிரச்சார யாத்திரை, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது. மூவர்ணக் கொடி யாத்திரை என்னும் இந்த யாத்திரையில் முன்னாள் ராணுவத்தினர், சமூகப் பணியாளர்கள், மற்றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள். வரும் 23-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த யாத்திரையில் இன்று மாலை புதுடெல்லியில், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா மற்றும் முக்கிய பிரமுகர்கள் இணைய உள்ளனர்.

*தீவிரவாதி சுட்டுக் கொலை*

ஜம்மு-காஷ்மீரின் ஷோபியான் மாவட்டத்தில் உள்ள, சுக்ரு கெல்லர் வனப்பகுதியில் இன்று பாதுகாப்பு படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 3 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள், லஷ்கரே தொய்பா TRF அமைப்பின் உறுப்பினர்கள் என நம்பப்படுவதாக காஷ்மீர் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சம்பந்தப்பட்ட பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக முன்னதாக உளவு தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட

போது தீவிரவாதிகள் சுடத் தொடங்கியதால் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

*நீதிபதி ஓய்வு*

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்சீவ் கன்னா, இன்று அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். நாட்டின் 51-ஆவது தலைமை நீதிபதியாக கடந்த ஆண்டு நவம்பர் 10-ஆம் தேதி பதவி ஏற்ற அவர் 6 மாத காலம் பதவி வகித்துள்ளார். உச்சநீதிமன்றத்தின் அடுத்த தலைமை நீதிபதி பதவிக்கு, மூத்த நீதிபதி திரு பி ஆர் கவாயின் பெயரை, திரு சஞ்சீவ் கன்னா ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளார். மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்திற்கான இப்பரிந்துரைக்கு, குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்த பின்னர், நீதிபதி திரு கவாய், 52-ஆவது தலைமை நீதிபதியாக பதவி ஏற்பார்.

*மோடி-சிபிஎஸ்இ*

சிபிஎஸ்இ 10- மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மாணாக்கர்களின் மனஉறுதி, ஒழுங்கு கட்டுப்பாடு மற்றும் கடின உழைப்பின் பிரதிபலிப்பே தேர்வு முடிவுகள் என்றும் மாணவ-மாணவிகளின் சாதனைகளில், பெற்றோர்கள், ஆசிரியர்கள், உள்பட அனைத்து தரப்பினரின் முக்கிய பங்களிப்பை அங்கீகரித்தல் அவசியம் என்றும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையை இந்த ஒரு தேர்வு தீர்மானிப்பதில்லை என்பதையும், வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான ஆற்றல் என்பது, மதிப்பெண் பட்டியலுக்கு அப்பாற்பட்டது என்பதையும், போதிய மதிப்பெண் பெற முடியாத மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் கூறி உள்ளார். இவ்வாண்டு சிபிஎஸ்இ 10-ஆம் வகுப்பு பொது தேர்வில், தேசிய அளவில் 93.66 சதவிகித மாணவ-மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொது தேர்வில் 88.39 சதவிகிதமாக, தேர்ச்சி விகிதம் பதிவாகி உள்ளது.

*புள்ளி விவரம்*

புதுச்சேரியில் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள, புதுச்சேரி ஒரு பார்வை-2024 என்னும் கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமிநாராயணன், திரு திருமுருகன், அரசுச் செயலர் திரு சுந்தரேசன், புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டு, கையேட்டின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இக்கையேடு குறித்து கூடுதல் விவரங்கள்……………

**(வாய்ஸ்)**

*புள்ளி விவரம்*

**(வாய்ஸ்)**

பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்குநரகத்தின் கையேட்டில் புதுச்சேரி மாநிலத்தின் சமூக-பொருளாதாரக் குறியீடுகள், மேம்பாட்டு சாதனைகள் குறித்த நிறைவான, சுருக்கமான புள்ளிவிவரங்களும், மக்கள் தொகை, கல்வி, சுகாதாரம், வேளாண்மை, தொழில், உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட தகவல்களும் இடம் பெற்றுள்ளன. வளர்ச்சிப் பணிகளை திட்டமிடவும், முடிவெடுக்கும் நடைமுறைகளுக்கும் மிகவும் பயன் உள்ளதாக இக்கையேடு அமையும் என பொருளாதார மற்றும் புள்ளிவிவர இயக்குநரகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. இக்கையேட்டின் மின்னணு வடிவம் புதுச்சேரி அரசின் அதிகாரப் பூர்வ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-குடிசைமாற்று* (11)

புதுச்சேரி லாம்பர்ட் சரவணன் நகரில் குடிசை மாற்று வாரியம் மூலம் 896 அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டும் திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளை 6 மாதங்களுக்குள் நிறைவு செய்து குடியிருப்புகளை பயனாளிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு முதலமைச்சர் திரு ரங்கசாமி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இன்று குடிசை மாற்று வாரிய அதிகாரிகளை அவர் நேரில் அழைத்து இவ்வாறு அறிவுறுத்தினார். துறை அமைச்சர் திரு திருமுருகன் மற்றும், குடிசை மாற்று வாரிய அதிகாரிகள், புதுச்சேரி அரசின் பெருந்தலைவர் காமராஜர் வீட்டு வசதி திட்டத்தை, பிரதமரின் வீட்டு வசதி திட்டத்துடன் இணைத்து, பயனாளிகளுக்கு 5 லட்சம் ரூபாய் மானியம் வழங்குவதற்கான விண்ணப்ப படிவத்தை, இந்த சந்திப்பின் போது முதலமைச்சரிடம் காட்டி ஒப்புதல் பெற்றனர்.

*ஐ போன்*

7 ஆயிரம் ரூபாய் முதல் 9 ஆயிரம் ரூபாய் விலைக்கு ஐ போன் வழங்கப்படும் என சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்து இணைய வழியில் பணம் பறித்த மோசடி நபர்கள் இருவரை புதுச்சேரியில் சைபர் கிரைம் போலீசார் கைது செய்துள்ளனர். இதுகுறித்து முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு நாரா சைதன்யா இன்று புதுச்சேரியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர் திரு பாஸ்கர், விவரங்களை வெளியிட்டு பேசினார்..................

**(வாய்ஸ்)**

*வானிலை*

தென்மேற்கு பருவமழை இன்று, தெற்கு வங்க கடல் தெற்கு அந்தமான கடல், நிகோபார் தீவுகள், மற்றும், வடக்கு அந்தமான் கடலின் சில பகுதிகளுக்கு முன்னேறி உள்ளது. அடுத்த 3, 4 நாட்களில், அந்தமான்-நிகோபார் தீவுகளின் எஞ்சிய பகுதிகளுக்கும், மத்திய வங்கக் கடலின் சில பகுதிகள், மற்றும் தெற்கு அரபிக் கடலுக்கும், பருவமழை மேலும் முன்னேற சாதகமான சூழல் தென்படுவதாக, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு உள்ளிட்ட காரணங்களால் இன்றைய தினம் தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை- திருப்பூர் மாவட்டங்களின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி-தேனி-திண்டுக்கல் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கேலோ இண்டியா*

பீகாரில் நடைபெறும் கேலோ இண்டியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளின் சைக்கிளிங் Time Trial பிரிவில் பெரும்பாலும் அனைத்து பதக்கங்களையும் ராஜஸ்தான் தட்டிச் சென்றது. 30 கிலோ மீட்டர் ஆடவர் சைக்கிள் பந்தயத்தில், தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய 3 பதக்கங்களையும் ராஜஸ்தான் அணியினர் வென்றனர். 20 கிலோமீட்டர் மகளிர் சைக்கிள் பந்தயத்தில் தங்கம் மற்றும்

வெண்கலப் பதக்கங்களை ராஜஸ்தான் அணியினர் வென்ற நிலையில் மகாராஷ்டிர வீராங்கனை வெள்ளிப் பதக்கம் வென்றார். மகளிர் ஒற்றையர் பேட்மிண்டன் பிரிவில், பாகல்பூரில் இன்று நடைபெற்ற போட்டிகளில் சட்டீஸ்கர் வீராங்கனை தனு சந்திரா, டெல்லியைச் சேர்ந்த ரிஷிகா நந்தி-யை தோற்கடித்து, தங்கப் பதக்கம் வென்றார். இப்பிரிவில் தமிழக வீராங்கனை ஆதிரா ராஜ்குமாருக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது. ராஜஸ்தான் இன்றைய வெற்றிகளின் அடிப்படையில், கர்நாடகத்தை பின்னுக்கு தள்ளிவிட்டு, பதக்கப் பட்டியலில் 2-ஆவது இடத்தை எட்டி உள்ளது. மகாராஷ்டிர அணி, முதல் இடத்தில் உள்ளது. கேலோ இண்டியா விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக டெல்லியில் இன்று நடைபெற்ற ரிதமிக் ஜிம்னாஸ்டிக்ஸ் இறுதிப் போட்டியில், மகாராஷ்டிர வீராங்கனை பரிணா, தனது ஐந்தாவது பதக்கமாக, தங்கப் பதக்கம் வென்றார்.

பொள்ளாச்சி வழக்கு

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட அனைத்து 9 பேரும் குற்றவாளிகள் என்று கோவை மகளிர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்து, இவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் உயிர் பிழைத்த 8 பேருக்கு மொத்தம் 85 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க தமிழக அரசுக்கு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாலியல் வன்கொடுமை மற்றும் மிரட்டல் குறித்து 19 வயது கல்லூரி மாணவி ஒருவர் கொடுத்த புகார் அடிப்படையில் 2019-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கை, அப்போதைய அஇஅதிமுக அரசு சிபிஐ விசாரணைக்கு ஒப்படைத்ததைத் தொடர்ந்து, முக்கிய குற்றச்சாட்டுகள், சிபிஐ-யால் பதிவு செய்யப்பட்டன. விசாரணைகளின் போது 8 பெண்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் நீதிமன்றம் இன்று தீர்ப்பை வெளியிட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள், பலத்த பாதுகாப்புடன் சேலம் சிறையில் இருந்து, நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு இருந்தனர்.

துறைமுகம்

இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள் கடந்த நிதியாண்டில் மொத்தம் 855 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு, குறிப்பித் தகுந்த வளர்ச்சியை எட்டி உள்ளன. இது அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.3 சதவிகித வளர்ச்சியாகும். கடந்த நிதியாண்டில் குறிப்பாக கண்டெய்னர் போக்குவரத்து 10 சதவிகித அளவிற்கும், உர வகைகளின் போக்குவரத்து 13 சதவிகித அளவிற்கும் அதிகரித்துள்ளது. துறைமுகங்களின் உள்கட்டமைப்பு வசதிகளையும், செயல்பாட்டுத் திறன்களையும் மேம்படுத்தி, தனியார் பங்கேற்பை ஊக்குவிக்க, தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதே இந்த வளர்ச்சிக்கு காரணம் என்று, மத்திய கப்பல் மற்றும் துறைமுகத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறி உள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தீவிரவாத முகாம்களை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் இந்தியாவிற்கு இருப்பதை,ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக, பிரதமர் திரு நரேந்தி மோடி கூறி உள்ளார்.

ராணுவ நடவடிக்கையின் வெற்றி குறித்து மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 11 நாள் பிரச்சார யாத்திரை, புதுடெல்லியில் இன்று தொடங்கி உள்ளது.

புதுச்சேரியில் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர இயக்குநரகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள, புள்ளிவிவரக் கையேட்டை, முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று வெளியிட்டார்.

தென்மேற்கு பருவமழை இன்று, தெற்கு வங்க கடல், தெற்கு அந்தமான கடல், நிகோபார் தீவுகள், மற்றும், வடக்கு அந்தமான் கடலின் சில பகுதிகளுக்கு முன்னேறி உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 13.5.2025/Script/

---------------------------------------